**சுருக்கம்**

உயர் கல்வி – கல்லூரிக் கல்வி 2010–11ம் ஆண்டு முதல் – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் முதுகலை ( Post Graduate Courses) பட்டப்படிப்பு பயில கல்விக் கட்டணத்தை ரத்து செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜி1) துறை

அரசாணை (நிலை) எண்.180 நாள்2.7.2010
ஆனி–18.
திருவள்ளுவராண்டு 2041,
படிக்கப்பட்டது.

கல்லூரிக் கல்வி இயக்குநர், கடித எண்.11758/என்2/10, நாள் 20.4.2010 & 13.5.2010.

-----

**ஆணை:**

2010–11ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் வரும் கல்வியாண்டிலிருந்து அரசு கல்லூரிகளில் M.A.,M.Sc., போன்ற முதுகலைப் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கட்டணம் ரத்து செய்யப்படும் என அரசு அறிவித்திருந்தது.

2. மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, தமிழகத்திலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை பட்டப்படிப்பு வரை அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கட்டணம் ரத்து செய்வது தொடர்பான விரிவான கருத்துருவை மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசின் பரிசீலனைக்கு அனுப்பியுள்ளார்.

3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமாக ஆய்வு செய்யப்பட்டு, 2010–11ம் கல்வியாண்டு முதல் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கட்டணத்தை ரத்து செய்யலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.254/JS(APA)/ 10, நாள்.14.6.2010–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநில கணக்காயர், சென்னை–18/35.
சம்பளக் கணக்கு அலுவலர். சென்னை–15/79.
உயர்கல்வித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்துறை / பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சீர்மரபினர் நலத்துறை /ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை /
சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை. சென்னை–9.
உயர்கல்வித் துறையின் அனைத்துப் பிரிவுகள். சென்னை–9.
இ.கோ. / உ.ந.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்.